DINAKARAN

PAGE NO: 14 DATE: 13.09.2023

# ஜெர்மனி கருத்தரங்கில் புதுவை பல்கலை பேராசிரியர் பங்கேற்பு



ஜெர்மனியில் நடந்த கருத்தரங்கில் புதுவை பல்கலைக் கழக பேராசிரியர் நந்திவர்மன் கலந்துகொண்டார்.

**புதுச்சேரி, செப். 13:** பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் தொடர்பான அறிவியல், கொள்கை கருத்தரங்கின் 10வது அமர்வு ஜெர்மனியின் பானில் நடந்தது. முனைவர் நந்திவர்மன் முத்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பசுமை வளாக அலுவலகத்தின் ஒருங்கிணைப்பாளராக கலந்துகொண்டு பேசினார். தூதுக்குழுவின் நிறைவு நாளில் குன்மிங்-மாண்ட்ரீல் குளோபல் பல்லுயிர் கட்டமைப்பு மற்றும் பிற சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் மதிப்பீட்டில் அனைத்து ஆசிரியர்களும் செய்த மகத்தான பணியை செயல்படுத்துவதில் அவர்களின் பங்கை அங்கீகரித்தது. பிறகு புதிய இயற்கை வளங்களின் ஆக்கிரமிக்கும் பூர்வீகமற்ற (ஏலியன்) இனங்கள் மதிப்பீட்டிற்கும், புதிய திட்டமிடப்பட்ட மதிப்பீடுகளுக்கும் ஒப்புதல் அளித்தது.

அந்தந்த நாடுகள் மதிப்பீட்டு அறிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு ஆதரவளிப்பதில் நாங்கள் எங்கள் பங்கைச் செய்யத் தயாராக உள்ளோம் என்றும், பொது நலனுக்காக பல்லுயிர் இழப்பைத் தடுத்து நிறுத்தவும், மாற்றியமைக்கவும் பங்குதாரர்களின் ஈடுபாட்டை எளிதாக்குகிறோம் என்றும் நந்திவர்மன் முத்து தனது அறிக்கையில் கூறினார்.

DINAMANI

DATE: 13.09.2023

PAGE NO: 03

# புதுவை மத்திய பல்கலை.யில் கருத்தரங்கம்

**புதுச்சேரி, செப்.12:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் இந்தியாவின் விரிவான தேசிய சக்தி மற்றும் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகளின் துறை சார்பில் நடந்த கருத்தரங்கில் புல முதன்மையர் பேராசிரியர் சுப்ரமணியம் ராஜு வரவேற்றார். முதல் அமர்வில் தலைமை வகித்து பேசிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் 21-ஆம் நூற்றாண்டில் புவிசார் அரசியலில் இந்தியாவின் மறுவடிவமைப்பு எனும் நூலின் முதல் பிரதியையும் வெளியிட்டார்.

பல்கலைக்கழக அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் துறை இணைப் பேராசிரியர் நந்தகிஷோர் கருத்தரங்க அறிமுக உரையாற்றினார்.

இந்தியாவின் விரிவான தேசிய சக்தி மற்றும் பாதுகாப்புக்கான தலைமை என்ற பொருளில் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் வினோத் ஜி.கந்தாரே சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழக அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் துறையின் உதவிப் பேராசிரியர் ரிச்சா திவாரி நன்றி கூறினார்.